ப∴வ்ரல்

# ப∴வ்ரல் நிறுவனத்தின் அறிவித்தல் (2014 டிசெம்பர் 18)

**பின்னணி**

நடைபெறவுள்ள ஆறாவது சனாதிபதித் தேர்தலானது சனாதிபதியாக பதவி வகித்த ஒருவருக்கு மூன்றாவது முறையாகவும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பினை வழங்கி, 2010 ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பின் மீதான 18ஆவது திருத்தத்தின் பின்னர் நடைபெறும் ஒரு தேர்தலாகும். தற்போதைய சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக, பெரும்பாலான எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ள ஆளும் கட்சியின் முன்னால் பொதுச் செயலாளரும், அமைச்சர்களில் ஒருவருமான திரு மைத்திரிபால சிரிசேன முக்கிய வேட்பாளராக களமிறங்கியுள்ள சூழ் நிலைமையில் இத்தேர்தல் தீர்க்கமானதும், கடும் போட்டி நிலவுவதுமான ஒரு தேர்தலாக மாறியுள்ளது. இலங்கை வரலாற்றில் சனபதித் தேர்தல்களில் போட்டியிட்ட இதர வேட்பாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை ஆராயும்போது தேர்தலில் களமிறங்கியுள்ள ஏனைய 17 வேட்பாளர்களும் ஏற்படுத்தியுள்ள அரசியல் அழுத்தம் குறைவாகவே உள்ளது. எனவே, இத் தேர்தல் தற்போதைய சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொது வேட்பாளரான திரு மைத்திரிபால சிரிசேனவுக்கும் இடையில் கடுமையான போட்டி நிறைந்த ஒரு தேர்லாகும். அதனால் இரண்டாவது விருப்பு வாக்கின் முக்கியத்துவம் இழக்கப்படுவதுடன், பெரும்பாலான வாக்காளர்கள் இரண்டாவது விருப்பு வாக்கிற்கு முக்கியத்துவம் அளிப்பார்களெனக் கருத முடியாது.

தற்போதைய சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் மாதம் 19 திகதி மேலும் ஒரு பதவி காலத்திற்கென தெரிவாவதற்குத் தனது விருப்பத்தை தெரிவித்த பின்னர், தேர்தல்கள் ஆணையாளரினால் 2014 நவம்பர் மாதம் 20 திகதி 1889/31ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் சனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டதிலிருந்து ப∴வ்ரல் நிறுவனம் பிற தேர்தல் அவதானிப்பு நிறுவனங்களுக்கு இணையாக தேர்தல் செயற்பாட்டை அவதானித்து வருகிறது. சனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைய குறிப்பிடத்தக்க காலத்திற்கு முன்னதாக சனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாகுமென்ற ஊக்கங்கள் பரவியிருந்த சூழ்நிலைமையில், உத்தயோகபூர்வமாக சனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் ப∴வ்ரல் அமைப்பு தேர்தல் அவதானிப்பு பணிக்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

**தேர்தலின் அடிப்படை**

இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 15,044,490 ஆகும். அதில் 400,000 பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணையாளரின் வேண்டுகோளுக்கமைய தேர்தலுக்கு முன்னர் அந்த எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 40,000 பேருக்கு தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றக்கொடுப்பதற்கு ப∴வ்ரல் நிறுவனம் உட்பட்ட அவதானிப்பு நிறுவனங்கள் செயலாற்றி வருகின்றன.

வாக்களிக்கத் தகுதிபெறுவதற்கு தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஏனையோரிடம் வேண்டப்பட்டுள்ளது.

**ப.ீ.வ்ரல் அமைப்பின் முயற்சி**

தேர்தல் சட்டங்களை மீறுதல் மற்றும் அதிகார துர்ப்பிரயோகத்திற்கு எதிராக செயற்படுவதால் தேர்தல் செய்ற்பாடு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ப.ீ.வ்ரல் அமைப்பின் அவதானிப்புகள் இரண்டு தளங்களைக் கொண்டுள்ளன. முதலாவது நேரடியான அவதானிப்புச் செயற்பாடாகும். இரண்டாவது பங்காளர்களுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதன் மூலம் எட்டும் இலக்குகளாகும்.

ப.ீ.வ்ரல் அமைப்பு தனது அவதானிப்புச் செயற்பாட்டில் 11,200 நிலையம் சார்ந்த கண்காணிப்பாளர்களையும், 335 நீண்டகால அவதானிப்பாளர்களையும், 360 நடமாடும் அவதானிப்பாளர்களையும், 1000 தபால்மூல வாக்கெடுப்பு அவதானிப்பாளர்களையும் 35 நடமாடும் குழுக்களையும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

தேவை அடிப்படையில் ப.ீ.வ்ரல் அமைப்புடன் தன்னார்வ அடிப்படையில் செயலாற்றிவரும் சட்டத்தரணிகளுடன் இணைந்து சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் ப.ீ.வ்ரல் அமைப்பு இதுவரை சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், சட்ட நடவடிக்கை மேற்கொள்வதானது தேவை எழும் சந்தர்ப்பங்களில் ஒரு மாற்றுச் செயலாகவே அமையும். தேர்தல் அவதானிப்பாளர்கள், பொலிஸ் மா அதிபர், தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் தொடர்ச்சியான பரிமாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான பின்புலத்தை ஏற்படுத்தும் பணியிலும் ப.ீ.வ்ரல் அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

குறிப்பாக சமயத் தலைவர்கள் உள்வாங்கப்படும் விதமாக மேற்கொள்ளப்படும் சமூக அடிப்படையிலான செயற்பாடு ப.ீ.வ்ரல் நிறுவனத்தின் செயற்பாடுகளில் மிக முக்கியமானதொரு பரிமாணமாகும். முன்னோடிகளான சிவில் சமூக மற்றும் சமயத் தலைவர்கள் 600 பேருக்கென கொழும்பில் 19ஆம் திகதி சமூக அடிப்படையிலான கூட்டமொன்றினை நடாத்த திட்டமிட்டுள்ளோம். அமைதிக் குழுக்களாக இவர்களை வலுவாக்கம் செய்தல் அதன் நோக்கமாகும். ப.ீ.வ்ரல் நிறுவனத்தின் நடமாடும் செயற்பாட்டுக்கென இவர்களின் அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ள சமயத் தலைவர்களுடன் ஏற்கெனவே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர், மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களத்துடன் அமுக்கக் குழுக்களாக செயலாற்ற தனியார் வர்த்தகத் துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் எற்படுத்திக்கொள்ளும் மூலோபாய பங்கீடுபாட்டைப் பலப்படுத்தல் இதன் பிரதான நோக்கமாகும். தேர்தல் தினம் வரையான காலத்திலும், தேர்தல் தினத்தன்றும் கீழ்மட்டத்தில் உயிரோட்டமான பங்களிப்பையும், வெளிப்படுத்தலையும் இக்குழுக்கள் மேற்கொள்ள உள்ளன.

வன்முறையற்ற தேர்தலை உறுதிசெய்வதற்காக ப.ீ.வ்ரல் அமைப்பு பிற நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகிறது. காலி மற்றும் கண்டி மாவட்டங்களில் வன்முறையற்ற தேர்தலை உறுதிசெய்வதற்காக மாவட்ட மட்டத்தில் சமயத்தலைவர்கள் மற்றும் முக்கிய அரசியல்வாதிகளுடனான சந்திப்பு ஒன்றை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பிரதான அவதானிப்பு**

2014 டிசெம்பர் 16ஆம் திகதி நள்ளிரவு வரையில் 289 சம்பவங்களுடன் தொடர்புடையதாக தேர்தல் சட்டத்தை மீறும் 336 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதில் வன்முறைச் சம்பவங்களும் அடங்குகின்றன. இவற்றில் 290 சம்பவங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 46 மீறல் சம்பவங்கள் உறுதி செய்யப்படவில்லை. ப.்.வ்ரல் அமைப்பின் அவதானிப்பின்படி ஒரு சம்பவத்தில் தேர்தல் சட்ட மீறல்கள் பல இடம்பெற்றிருக்கலாம் என்பதை இங்கு குறிப்பிடமுடியும். வன்முறைச் சம்பவங்களில் 73 சம்பவங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன் 6 சம்பங்கள் உறுதி செய்யப்படவில்லை. அரச ஆதனங்களை தவறாகப் பயன்படுத்தியுள்ளமை தொடர்பான 76 சம்பவங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளதோடு, 15 சம்பவங்கள் உறுதிசெய்யப்படவில்லை.

அரச ஆதனங்களையும், அரசாங்க அலுவலர்களையும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல், புதிய அரசாங்க அலுவலர் நியமனங்கள் வழங்கப்படல் மற்றும் பணியிடமாற்றம் வழங்கல் போன்ற தேர்தல் சட்ட மீறல்கள் மேலே சொல்லப்பட்ட பகுதியில் அடங்குகின்றன. அரசியல் கட்சி அலுவலகங்களுக்கு தீ வைத்தல், சேதம் விளைவித்தல், எதிர் வேட்பாளரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் தேர்தல் சட்டமீறல் தொடர்பான மூன்றாவது வகுதியில் அடங்குவதுடன் இந்த வகுதியில் உறுதி செய்யப்பட்ட 141 மீறல்களும் உறுதிசெய்யப்படாத 25 மீறல்களும் காணப்படுகின்றன.

சிவில் சமூக, அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினையடுத்து கொழும்பு நகரின் சகல வீதிகளிலுமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த அனைத்து சுவரொட்டிகள் மற்றும் காட்சிப்படங்கள் (கட்டவுட்) குறிப்பிடத்தக்க அளவில் அகற்றப்பட்டிருப்பதை ப.்.வ்ரல் அமைப்பு அவதானித்துள்ளது. தேர்தல்கள் ஆணையாளரின் நெறிப்படுத்தலில் பொலிசார் மேற்கொண்ட இச்செயற்பாட்டை நாங்கள் வரவேற்கின்றோம். இது தேர்தல் சட்டம் உரிய முறையில் பின்பற்றப்படுகின்றதா என்பதற்குப் பொறுப்புக்கூறும் அரச நிறுவனங்களின் இயக்கத்திற்கு பலம் சேர்க்கும் சாதகமானதொரு சமிக்ஞையாகும். எவ்வாறெனினும், பிற நகரங்களில் சுவரொட்டிகளும், காட்சிப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேற்படியான வரவேற்கத்தக்க அணுகுமுறையை பிற பிரதேசங்களிலும் விஸ்தரிக்க நாம் உறுதியுடன் செயல்படுவோம்.

கடந்த வாரத்தில் வன்முறைச் சம்பவங்களில் வீழ்ச்சி நிலையை அவதானிக்க முடிந்ததுடன், இந்த சாதக நிலைமையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், இது ஒரு தற்காலிக ஓய்வு மட்டுமே என்பதை எடுத்துக்காட்டும் சமிக்ஞைகளை அவதானிக்க முடிந்துள்ளது. தேர்தல் தினம் நெருங்கிவரும்போது வன்முறைகள் தலைதூக்குவதற்குள்ள வாய்ப்பினைக் கட்டுப்படுத்துவதற்காக பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

**விசேட அவதானிப்புகள்**

1 அரச ஆதானங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

ப.்.வ்ரல் அமைப்பு, அரச ஆதனங்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் பின்வரும் சம்பவங்களை அவதானித்துள்ளது.

- தேர்தலுக்கு இணையாக நலனோம்புகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

**எடுத்துக்காட்டு**

நாடெங்கிலுமுள்ள சமுர்த்திப் பெறுநர்களுக்கு விசேட சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படுதல்

காலி பிரதேசத்தில் புதிய பயனாளிகளுக்கு சமுர்த்தி அட்டை விநியோகம்

திருகோணமலை, சேருவில விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்கல்

பெலனறுவை மாவட்ட விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கல்

வடமாகாணத்தில் நீர்ப்பம்பிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் விநியோகம்

காலி ரத்கம பிரதேசத்தில் சமயலறை உபகரணங்கள் விநியோகம்

- தேர்தலை இலக்காகக் கொண்டு பல்வேறு உபகரணங்களை சலுகை அடிப்படையில் வழங்குதல்

**எடுத்துக்காட்டு**

ஓய்வு பெறுநர்களுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்கல் (தேர்தல்கள் ஆணையாளரின் இடையீட்டில் இச்செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது)

அரசாங்க அலுவலர்களுக்கு மானிய விலையில் மோட்டார் சைக்கிள் வழங்கல்

- தேர்தல் நோக்கங்களுக்காக அரச வாகனங்கள் பயன்படுத்தப்படல்

**எடுத்துக்காட்டு**

2014 டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊர்வலத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 1000க்கும் அதிகமான பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டமை.

2014 டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி பாணந்துறையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊர்வலத்தில் 500க்கும் அதிகமான பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டமை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, சுவரொட்டிகளைக் கொண்டு செல்வதற்காக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துதல்.

- தேர்தல் பிரசார அலுவலகங்களாகவும், பிரசார நடவடிக்கைகளுக்காகவும் அரசுக்குச் சொந்தமான வளாகங்களைப் பயன்படுத்துதல், தேர்தல் பிரசார கூட்டங்களை நடாத்துவதற்காகவும், காட்சிப் படங்களை காட்சிப்படுத்துவதற்காகவும் அரச வளாகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2 அரசாங்க அலுவலர்களையும், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்

- தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரசாங்க அலுவலர்களை குறிப்பாக அரசாங்க நிறுவனங்களில் தொழிலாளர் தரத்திலுள்ள அலுவலர்களை ஈடுபடுத்தல்

  **எடுத்துக்காட்டு**

  வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிலாளர்களை சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக ஈடுபடுத்தல்

  அக்குரெஸ்ஸ நகரத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்ற மேடையை அமைப்பதற்கும், அலங்கரிப்பதற்கும் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை ஈடுபடுத்தல்

- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் சார்பாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், அவரை மேம்படுத்துவதற்காகவும் அரசாங்கத்துறை அலுவலர்களை வழிப்படுத்தல். அரசாங்கத்துறையின் சபைகள் மற்றும் அதிகாரசபைகளைச் சேர்ந்த அலுவலர்கள் இதில் சிக்குபவர்களாக உள்ளனர்.

  **எடுத்துக்காட்டு**

  தேர்தல் பிரசார நோக்கத்திற்காக இளைஞர் சேவை அலுவலர்களை ஈடுபடுத்தல்

  இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போ அலுவலகங்களுக்கு தமது வேட்பாளர் சார்பாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தொழிற்சங்க தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள விரிவான அறிவுறுத்தல்கள்.

3 தேர்தல் பிரசார நோக்கங்களுக்காக அரச வைபவங்களைப் பயன்படுத்துதல்

இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளரின் தேர்தல் நடவடிக்கையில் தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறியுள்ளது. தேர்தல் பிரசார நோக்கத்திற்கான மேடையாக அரச வைபவங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**எடுத்துக்காட்டு**

சாலமுல்ல பிரதேசத்தில் வீட்டுத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல வழங்கல் நிகழ்வு

எம்பிலிப்பிட்டி பிரதேசத்தில் பொதுச்சந்தை அங்குரார்ப்பணம்

4 முக்கிய அரசாங்கத்துறை நிறவனங்களில் மேற்கொள்ளப்படும் பணியிடமாற்றங்களும் புதிய நியமனங்களும்.

**எடுத்துக்காட்டு**

**பொலிஸ் -**

சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்காது புதிய பணியிட மாற்றங்களை வழங்கியுள்ளார். பொலிஸ் கான்ஸ்டபிள்களை உப பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்த்துவதற்காக நேர்முகப் பரீட்டைகளை நடாத்தியதும், அளுத்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பணியிட மாற்றம் வழங்கல் மற்றும் வியாங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு பணியிடமாற்றம் வழங்கல் என்பன இதில் அடங்குகின்றன.

**ஆசிரியர் நியமனங்கள்**

கல்வித்துறைக்கென 210 பேர் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர் அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் விளையாட்டு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான ஒரு முயற்சி பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

5 புதிய சனநாயக முன்னணி வேட்பாளருக்கான தேர்தல் பிரசார வாய்ப்பு மட்டுப்படுத்தப்படல்

**எடுத்துக்காட்டு**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள், பொது இடங்களுக்கு செல்வதனை நிராகரித்தல் - அக்குரெஸ்ஸ பிரதேசசபை மற்றும் தலாவ பொது வளையாட்டரங்கினை வழங்காமை.

கொத்மலையில் நடைபெற்ற புதிய சனநாயக முன்னணி வேட்பாளரின் கூட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த மின்சாரத்தைத் துண்டித்தல் மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தவர்களை ஏற்றிவந்த வாகனங்களுக்கு இடையூறு விளைவித்தமை.

கம்பஹா பிரதேசத்தில் புதிய சனநாயக முன்னணியின் கூட்டத்திற்கு இடையூறு செய்தமை.

கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதி சித்திரா மன்திலக்கவுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருத்தல்.

6 ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைபின் தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக அரச ஊடகங்களை முழு அளவில் பயன்படுத்துதல்.

சனாதிபதியின் தேர்தல் நடவடிக்கைக்காக அரச ஊடகங்கள் மிக அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இது எதிர்க்கட்சிக்கு கிடைக்கும் ஊடாக நேரத்தை விஞ்சிய பிரசார நடவடிக்கையாக உள்ளது.

7 சம்பவங்களும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறையும்

வெடிபொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் தொடங்கி கடுமையான துன்புறுத்தல்கள், துப்பாக்கிச் சூடு, அச்சுறுத்தல் அத்துடன் துப்பாக்கி முனையில் பயமுறுத்தல் வரையிலான வன்முறைச் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கடந்த வாரத்தில் இதுபோன்ற சம்பவங்களில் சற்று வீழ்ச்சியைக் காண முடிந்ததுடன், இந்நிலை தொடர்ந்து நீடிக்குமா என்பது சந்தேகமே. தேர்தல் தினம் நெருங்கும்போது வன்முறைகளுக்கான தூண்டுதல்கள் அதிகரிக்கப்படும் போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

கடுமையான துன்புறுத்தல் - தலாவ பிரதேசத்தில் புதிய சனநாயக முன்னணி வேட்பாளரின் வேட்பாளர் நிலை அறிவிக்கப்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்திய ஓர் இளைஞன் தலாவ பிரதேசசபைத் தலைவர் ரி. எம் இந்திக உதயகுமார மற்றும் வேறு நபர்களால் கோடரியாலும், தடிகளாலும் தாக்கப்பட்டுள்ளார்.

பேராதனை வெலிகல்லயில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆதரவாளர் பிரசார அலுவலகத்தில் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு புதிய சனநாயக முன்னணி வேட்பாளரின் வேட்பாளர் நிலை அறிவிக்கப்பட்ட மகிழ்ச்சியை பட்டாசு கொழுத்தி கொண்டாடியவர்கள் மீது இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடாத்தியுள்ளனர்.

தேர்தல் பிரசார அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் - அம்பாந்தோட்டையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அலுவலகமொன்று தாக்குதலுக்கு இலக்கானதோடு, அந்த வளாகமும் சேதத்திற்கு உள்ளானது.

- அரசாங்க நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நேரடி இடையீடு

  பொலிஸ் மா அதிபர் தேர்தல் காலத்தில் வழங்க முயற்சித்த புதிய விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் நியமனங்களை நிறுத்தியமை. தேர்தல் ஊர்வலங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்படுவதை மட்டுப்படுத்தல் மற்றும் இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டி கூட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பஸ் வண்டிகளில் எண்ணிக்கையினை அறியத்தருமாறு கோருதல்.

  ஓப்பநாயக்க, வெலிகபொல மற்றும் கொடக்கவெல பிரதேச செயலகங்களில் (தேர்தல் சட்டம் மீறப்படும் வகையில்) அரசாங்க பணியாளர்கள் தேர்தல் கூட்டங்கள் நடாத்துவதைத் தடுத்தல்.

- ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டவை

  ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு வேட்பாளர் சார்பாக நாடெங்கிலும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணியாளர்கள்

ஈடுபடுத்தப்பட்டமையானது ப.்.வ்ரல் நிறுவனம் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கைகளின் விளைவாக இடைநிறுத்தப்பட்டது.

**பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள்**

தேர்தலொன்றில் பொதுமக்களின் வகிபாகமானது வாக்களிப்பதுடன் நின்றுவிடாத ஒரு செயற்பாடாகும். சுதந்திரமான தேர்தல் ஒன்றுக்கான சூழ்நிலைமையினைப் பாதுகாத்தல் வாக்கினைப் பாதுகாத்துக் கொள்ளும் செயற்பாட்டின் இன்னுமொரு பக்கமாகும். தேர்தலும், தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளும் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெறுவதற்கப் பொறுப்புக் கூற தேர்தல் அவதானிப்பாளர்களால் முன்னெடுத்துச் செல்லும் செயற்பாட்டில் பொது மக்களும் இணைந்துகொள்ள வேண்டும். எனவே நாம் பொது மக்களிடம் பின்வருவனவற்றை வேண்டுகிறோம்.

1 நீங்கள் உங்கள் வாக்கினை அளியுங்கள்.

2 தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு, மதகுரு அடையாள அட்டை, ஓய்வுபெறுநர் அடையாள அட்டை, மூத்த பிரசைகளுக்கான அடையாளா அட்டை, தேர்தலுக்கென தேர்தல்கள் ஆணையாளரினால் வினியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை **(2012 மாகாணசபைத் தேர்தல்களுக்காக வினியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளை மீண்டும் செல்லுபடியானவையாக மாற்றிக்கொள்ள வேண்டும்)** அடையாளத்தை உறுதிசெய்யும் முறையான ஓர் ஆவணம் உங்களிடம் இல்லாவிட்டால். உங்கள் கிராம அலுவலரைச் சந்தித்து தற்காலிக அடையாள ஆவணமொன்றைப் பெற்றுக்கொள்ளவும்.

3 வன்முறை, தேர்தல் சட்ட மீறல் செயல்களில் ஈடுபட வேண்டாம்.

4 உங்கள் பிரதேசத்தில் தேர்தல் சட்ட மீறல் செயல்கள் இடம்பெற்றால், அதுபற்றி தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தேர்தல் அவதானிப்பு நிறுவனங்களுக்கு அறிவிக்கவும்.

5 உங்கள் வாக்குச் சாவடியைப் பாதுகாத்தல் உங்களது பொறுப்பும் ஆகும்.